<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>சி.சி.எண். 16/2018</u>

2023 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.7 வது நபரின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.சௌந்தர்பாண்டி உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டெல்லி @ மகேந்திரன் | வயது | 37 |
| த.பெ.(அ)க.பெ. | சந்திரன் | தொழில் | விவசாயம் |
| ஊர்/பணிபுரியுமிடம் | ஆண்டியப்பனூர் | சமயம் | |
| வட்டம் | வாணியம்பாடி | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u> **1ம் எதிரி ஆஜர். 2,3 எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.**

நான் ஆண்டியப்பனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் டிராக்டர் ஓட்டி வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். வெள்ளியங்கிரி என்பவரின் தம்பி நிலத்தில் டிராக்டர் ஓட்டுவதற்காக சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பாக என்னை அழைத்தார்கள். எனக்கு தேதி மாதம் நினைவில்லை. வெள்ளியங்கிரி எனக்கு தெரியும் என்பதால் நான் சென்றேன். அவரது தம்பி மற்றும் தம்பி மகன் பெயர் எனக்கு நினைவில்லை. நான் டிராக்டர் ஓட்ட ஆரம்பித்த உடன் 1ம் எதிரி மணி அங்கு வந்து இந்த நிலத்தில் பிரச்சனை உள்ளது என்றும், நீ டிராக்டர் ஓட்ட வேண்டாம் என்று கூறினார். என்னை டிராக்டர் ஓட்ட அழைத்த நபருக்கும் 1ம் எதிரி மற்றும் அவரது மகன்களுக்கும் பிர்ச்சனை ஏற்பட்டது. நான் அதை பார்த்து உடனே அங்கிருந்து கிளம்பிவிட்டேன். மேற்படி சம்பவயிடத்திலிருந்து உடனடியாக நான் கிளம்பிவிட்டதால் அங்கு நடந்த சண்டையில் யாருக்கு என்ன ஆனாது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

எதிரி மணி மற்றும் பாப்பன்னன், வெள்ளியங்கிரி அண்ணன் தம்பி என்றால் பங்காளி முறை உறவினர்கள். நான் இருக்கும்போது சண்டை எதுவும் நடக்கவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி மணி நிலத்தை ஓட்ட கூடாது என்று சொன்னதால் நான் ஓட்டவில்லை என்றால் சரிதான். அவர்களுக்குள் என்ன சண்டை என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியின் கையொப்பம்